கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கோட்டை பகுதி, சேலம் மத்திய மாவட்டம்



திமிரி மேற்கு ஒன்றியம், இராணிப்பேட்டை மாவட்டம்.



வெம்பாக்கம் மத்திய ஒன்றியம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், கரூர் மாவட்டம்.



சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம் திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.

## தொழில் துறையின் அறிக்கையில் உள்ள புள்ளி விவரங்கள் புரியாமல்!

# அறியாமையைக் காட்டிக்கொள்ளவே அறிக்கை வெளியிட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

சென்னை, செப்.11–

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, ”அறியாமையைக் காட்டிக் கொள்வதற்காகவே அறிக்கை வெளியிட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகால சீர்கெட்ட நிர்வாகத்தால் தமிழ்நாடு என்று பெயரைக் கேட்டாலே தொழில் முதலீட்டாளர்கள் தெறித்து ஓடிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, கடந்த நான்காண்டுகளில் தொழில்துறையில் தமிழ் நாட்டை உயர்வான நிலைக்குக் கொண்டு வந்திருப்பதை பொறுத்துக்கொள்ள முடியாத வயிற்றெரிச்சலுடன் அறிக்கை விடும் எதிர்க்கட்சித் தலைவரின் அறியாமையைப் பார்த்து பரிதாபப்படுகிறேன்.

முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்களால் எவ்வளவு முதலீடு வந்தது என்று ‘திரும்பத் திரும்ப பேசும்’ அரசியல் களத்தின் வடிவேலுவாகியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். முதலமைச்சர் தன்னுடைய ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே முந்தைய வெளிநாட்டுப் பயணங்களில் போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு முதலீடுகளாக மாறி, எங்கெங்கே தொழில்நிறுவனங்கள், எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு என்பதை ஊடகங்களிடம் தெளிவாக விளக்கி விட்டுத்தான் புறப்பட்டார்.

இது எதுவும் அறியாமலும்புரிந்து கொள்ளத் தெரியாமலும் சொந்தக் கட்சிப் பிரச்சினைகளால் கோமாவில் இருந்து திடீரென விழித்து, ‘அன்னைக்கு காலையில 6 மணி இருக்கும். கோழி கொக்கரக்கோன்னு கூவுச்சு..’ என்று எதிர்க்கட்சித் தலைவர், சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருடைய கேள்விகளுக்கு தொழில்துறை மானியக் கோரிக்கையிலும், அதன்பிறகு பல அறிக்கைகளிலும் தெளிவாக பதில் தரப்பட்டுள்ளது. சேக்கிழார் எழுதிய இராமாயணத்தைப் படித்தவருக்கு தொழில்துறையின் அறிக்கையில் உள்ள புள்ளிவிவரங்கள் எந்த அளவுக்குப் புரியும் என்றும் தெரியவில்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலமைச்சர் இதற்கு முன் பயணித்த ஐக்கிய அரபு நாடுகளில் 6 ஒப்பந்தங்கள், 6100 கோடி முதலீடு, சிங்கப்பூர் 1 ஒப்பந்தம், 312 கோடி முதலீடு, ஜப்பான் 7 ஒப்பந்தங்கள், 1030 கோடி முதலீடு, ஸ்பெய்ன் 3 ஒப்பந்தங்கள் 3440 கோடி முதலீடு, அமெரிக்கா 19 ஒப்பந்தங்கள் 7616 கோடி ரூபாய் முதலீடு எனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அந்த 36 ஒப்பந்தங்களில் Yield Engineering Services, In



finix Services, Rockwell Automation உள்ளிட்ட 12 ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி நிலையை எட்டிவிட்டன. 11 நிறுவனங்களின் நில எடுப்புகட்டுமானப்பணிகள் போன்றவை நடைபெற்று வருகின்றன. சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் முதலீடுகள் செய்யப்பட்டு அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தங்களை திராவிட மாடல் அரசின் கணக்கில் எழுத வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், ஒப்பந்தம் போட்டுவிட்டு எதையுமே செய்யாத உங்களின் உதவாக்கரை ஆட்சியைப் போல இல்லாமல், நீங்கள் போட்ட ஒப்பந்தங்களையும் நம் தமிழ்நாட்டுக்கான முதலீடுகளாக மாற்றும் முயற்சியை முதலமைச்சர் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் நிலையில், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல உங்களின் அமெரிக்கப் பயணத்தின் லட்சணம் பல்லைக் காட்டுகிறது.

2019ஆம் ஆண்டு முதலீடுகளை ஈரப்பதற்காக அன்றைய முதலமைச்சராக அமெரிக்காவுக்குச் சென்ற நீங்கள் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 27. இதன் மூலம் 5087 கோடி ரூபாய் முதலீடு கிடைக்குமென்றும் 24,720 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் சொன்னீர்கள். ஆனால், உண்மை நிலையைத் தேடினால், ஒப்பந்தம் போடப்பட்ட ரூ.5087 கோடியில் 25% முதலீடு கூட வரவில்லை !

தமிழ்நாட்டை விட மகாராஷ்ட்ரா, டெல்லி போன்ற மாநிலங்களுக்கு அதிக முதலீடுகள் வந்திருப்பதாகச் சொல்வதிலும் உண்மையில்லை. தொழில்துறையைப் பொறுத்தவரை, அந்நிய நேரடி முதலீட்டுத் தரவுகள் என்பவை முழுமையானவை அல்ல என்பதை பல முறை தெரிவித்திருக்கிறோம். ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு இந்தியாவில் எந்த மாநிலத்தில் தலைமையகம் உள்ளதோ அந்த மாநிலத்தின் பெயரில்தான் அந்நிய நேரடி முதலீடு கணக்கு காட்டப்படும். தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் பன்னாட்டு நிறுவனங்களின் இந்தியத் தலைமையகம் டெல்லி, மும்பை போன்ற நகரங்களில் இருந்தால் அந்த மாநிலங்களுக்குரியதாக தரவுகள் காட்டும். ஆனால், ஒப்பந்தம் செய்த தமிழ்நாட்டிற்குதான் அந்த முதலீடு இறுதியில் நிலம்,கட்டிடம், இயந்திரங்கள் என வந்தடைந்து வேலைவாய்ப்புகள் உருவாகும். இது பற்றி பல முறை தெளிவுபடுத்தியும் விளக்கம் கேட்பது விளக்கெண் ணெய்த்தனமாக இருக்கிறது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னாலும் புரியப்போவதில்லை. சொந்தமாகவும் தெரிந்துகொள்ளப் போவதில்லை என்கிற நிலைமையில் உள்ள உங்களுக்கு வெள்ளை அறிக்கை கொடுத்தால் மட்டும் விளங்கிவிடுமா என்ன?

இறுதியாக ஒன்று, தொழில் துறை சார்ந்த விளக்க அறிக்கைகள் சமூக வலைதளப் பக்கத்தில் தான் வெளியாகிறது என்று சொல்லும் உங்களின் அறிக்கையும் சமூக வலைதளத்தில்தான் பதிவிடப்பட்டுள்ளது என்பதை அறிக்கை எழுதித் தருபவரிடம் அடுத்த முறை மறக்காமல் ஞாபகப்படுத்தி விடுங்கள்.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி குறித்து தெளிவாகப் பல முறை அறிக்கை வெளியிட்டும் அதைப் புரிந்து கொள்ள உங்களால் முடியவில்லை. நான் சுற்றுச்சூழல் ஆர்வலர் என்ற முறையில் ஒரு வெள்ளைத் தாளை வீணடிக்க விரும்பவில்லை என்பதை, இனி பா.ஜ.க.வுடன் கூட்டணியே கிடையாது என்று சொல்லிவிட்டு மீண்டும் கூட்டணி அமைத்திருக்கும் வெள்ளைக்கொடி வேந்தருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் கோல்டன் கேட்ஸ் குளோபல் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு 2025 (SLAS) ஆய்வுக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.


